சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 25.03.2026
வா.சா.2 –பாலசுப்பிரமணியன் S/o.கருப்பணன்
O.S. No.15/2022
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

இந்த வழக்கை போஸ், மாணிக்கம் வகையறா மீது தாக்கல் செய்திருக்கிறார். சொத்து பிரச்சினை தொடர்பாக வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் அளவு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் நான் வாடகைக்கு டீக்கடை நடத்தி வந்தேன் என்றோ, வாடகைக்கு சைக்கிள் விடும் கடை நடத்தி வந்ததை நிருபிக்கவோ ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் காசிவகையறாவும், மாணிக்கம்,போஸ், பாண்டி, கணேசன் ஒவ்வொரு வருடமும் மண்டகபடியை நடத்தி வருவார்கள். என்ன ஆவணத்தின் அடிப்படையில் அவர்கள் மண்டகப்படி நடத்தி வருகிறார்கள் என்று தெரியுமா என்றால்ஆவணங்கள் தெரியாது. போஸின் மாமனார் பெயர் வீரணன் அம்பலம் என்றால் சரிதான். போஸின் மாமானர் வீரணன் அம்பலம் சிபாரிசின் பேரில் தான் நான் கடை நடத்தி வந்தேனா என்றால் இல்லை. நான் வழக்கு சொத்தில் கடை நடத்தி வந்ததை காலி செய்து 15 ஆண்டுகள் இருக்குமா என்றால் இருக்கும். அதன்பிறகு அவர்களுக்குள் எவ்வாறு சொத்தை பகிர்ந்து கொண்டார்கள் என்றோ, என்ன நடக்கிறது என்றோ தெரியுமா என்றால் தெரியாது. நான் ஆரம்பத்தில் கூட்டுறவு மில், மேலூரில் வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான். கூட்டுறவு மில் மூடப்பட்டபிறகு தான் வீரணன் அம்பலம் சிபாரிசின் பேரில் கடை நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பாகவே நான் கடை வைத்துவிட்டேன். வாதி போஸின் மாமானார் வீரணன் என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கை பற்றி எனக்கு எதுவுமே தெரியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.25 19:14:59 +0530

Sub Judge
Melur